**கோடைக் கால வேலைவாய்ப்புச் சேவை**

கோடைக் கால வேலைவாய்ப்புச் சேவை (Summer Job Service – SJS Program) என்ற இந்த ஒன்டாரியோ அரசாங்கத் திட்டம் மாணவர்கள் கோடைக்கால வேலைகளைப் பெற உதவி செய்யும். இந்தத் திட்டம் மாணவர்களுக்கு இலவசமாக வேலை தேடுவதற்கான ஆதரவு மற்றும் வேலைக்கு அமர்த்தும் சேவைகளை வழங்குகிறது. அத்தோடு $2/மணித்தியாலத்திற்கு என்ற வேலைக்கு எடுக்க தூண்டும் திட்டத்தை (ஹயரிங் இன்சென்டிவ்) கோடை காலத்தில் ஒரு மாணவனை வேலைக்கு எடுப்பவர்களுக்கு வழங்குகிறது.

**என்ன சேவைகள் கிடைக்கப் பெறுகின்றன?**

கோடைக்கால வேலைவாய்ப்புச் சேவை பின்வருவனவற்றை வழங்குகிறது:

- ஒரு மாணவன் ஒரு வேலயை எடுப்பதற்கும் அதை தங்கவைத்துக் கொள்வதற்கும் தேவையான வேலை தேடுதல் மற்றும் தன்னுடைய திறமைகளை விற்பனை செய்யவும் தேவையான பயிற்ச்சியை இலவசமாகத் தருகிறது.
- $2/மணித்தியாலத்திற்கு என்ற வேலைக்கு எடுக்கத்தூண்டும் திட்டத்தை, ஒரு மாணவனை வேலைக்கு எடுப்பவர்களுக்கு வழங்குகிறது.
- ஏப்ரல் தொடங்கி செப்டம்பர் 30 வரையில் 16 வாரங்கள் வரைக்கும் நிலைக்கக் கூடிய வேலைகளை வழங்குகிறது.
- கோடைக்காலம் மற்றும் முழு வருடத்திற்குமான வேலைவாய்ப்புப் பட்டியலை (ஜொப் போஸ்டிங்ஸ்) மாணவர்களுக்கு வழங்குகிறது.

**யார் பங்குகொள்ள முடியும்?**

**மாணவர்கள்:**

- 15 முதல் 24 வயது ( அங்கவீனராய் இருந்தால் 29 வயதுவரை)
- இலையுதிர் காலத்தில் பாடசாலைக்குத் திரும்ப நினைப்பவர்கள்.

**வேலை வழங்குபவர்கள்:**

- தனியார்துறை, லாபத்திற்கென இயங்காத அல்லது பொதுசனத்துறைகளில் (பப்ளிக் செக்டர்கள்) இயங்கும், அத்தோடு கோடைக்காலத்தில் ஒன்டாரியோவில் வேலைவழங்குபவர்கள்.

**அத்தோடு, கோடைக்கால மாணவனை வேலைக்கு அமர்த்துவதற்க்கான வேலைக்கு எடுக்கத்தூண்டும் திட்டத்தைப் பெற வேலை வழங்குபவர்:**

- மாணவனுக்கு பொறுப்பு மற்றும் வேலைத்தள பாதுகாப்பு காப்புறுதித் திட்டத்தை நிச்சயப்படுத்த வேண்டும்.
- மாணவனுக்கு உறவினர் அல்லாதவராக இருக்க வேண்டும்.

**நான் கோடைக்கால வேலைவாய்ப்பு சேவையை எவ்வாறு பெற முடியும்?**

வேலைத்தொடர்பு வழங்கும் அநேகமான அமைப்புகள், கோடைக்கால வேலைவாய்ப்புச் சேவை ஊடாக மாணவர்கள் வேலைகளைப்பெற உதவுகின்றன மற்றும் வேலை வழங்குபவர்களும் கோடைக்கால உதவியைக் கண்டடைகிறார்கள்.

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X